**கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகம் - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 பாதகமான அபிப்பிராயம்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று , உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவத்தின் காரணமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் விவசாய தொழிநுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவகத்தின் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலானது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்

**1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவகம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி

இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு
எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவகத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிறுவகம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்குஎசாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிறுவகத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிறுவகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவகம் இணங்கியிருந்ததா என்பதும்,
- நிறுவகம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்
- நிறுவகத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 நிதிக்கூற்றுக்கள்

1.5.1 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 03 கணக்குகளின் உருப்படிகள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறுமதிகளுக்கும் பேரேடுகளுக்கும் இடையே ரூபா 74,293,890 வேறுபாடொன்று காணப்பட்டது. இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02 இன் பிரகாரம், சீராக்கப்பட வேண்டிய பெறுமதிக்கும் காசுப்பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்ட 05 கணக்குகளின் உருப்படிகளுக்கும் இடையே ரூபா 9,415,448 தொகையான வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. இருப்பினும், அந்த வேறுபாடுகள் பற்றிய தேவையான விளக்கங்கள் கணக்காய்விற்கு கிடைக்கப்பெறவில்லை. | நிதிக்கூற்றுக்களுக்கும் பேரேட்டிற்கும் இடையேயான வேறுபாட்டிற்கு பல கணக்குகள் காரணமாக இருந்ததனால் அந்த அனைத்து கணக்குகளினதும் மொத்தம் கணிப்பிடப்படல் வேண்டும். எனவே, சரியாக சீராக்கப்பட்ட பெறுமதிகள் காலக்கிரமத்தில் காட்டப்படும். | வேறுபாடுகளை இனங்கண்டதன் பின்னர் சரிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றப்படல் வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பணிக்கொடை ஒதுக்கங்கள் மீதான தொழில்சார் மதிப்பீடொன்றில் ரூபா 1,915,792 தொகையான இலாபம் அடையாளம் காணப்பட்டிருந்தது மற்றும் இது இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம், முற்றடக்க வருமான கூற்றின் கீழுள்ள கணக்குகளுக்கு முன்கொண்டு வரப்படல் வேண்டும். இருப்பினும், அந்தபெறுமதி ஒதுக்கங்களின் கீழுள்ள ஏனைய ஒதுக்கமொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் திரண்ட இலாபத்துடன் சேர்க்கப்படும். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

| உரிய நியமம் தொடர்பாக இணங்காமை | | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கப் பெறவேண்டிய பாடநெறிக் கட்டணம் முறையாக அடையாளம் காணப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. மீளாண்டுடன் தொடர்புடைய பாடநெறியொன்றின் கட்டண வருமானம் ரூபா 7,790,020 நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவாக, நிதிக்கூற்றுக்களில் ஆண்டுக்கான மிகை அதே தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | உரிய தகவல் கிடைக்கப்பெறாமை காரணமாக மாணவர்களின் எண்ணிக்கையினை சரியாக அடையாளம் காண முடியாதிருந்தது. எனவே, அட்டுறுவான பெறுமதியினை கணிப்பீடு செய்ய முடியாதிருந்தது. | கொடுக்கல் வாங்கல்கள் அட்டுறு அடிப்படையின் கீழ் கணக்குகளுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். |
| (ஆ) | நடைமுறை அல்லா சொத்துக்களின் கீழ் உள்ள ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களின் 05 உருப்படிகளின் தேய்வு மீதான ரூபா 2,403,244 தொகையான செலவு மற்றும் கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புக்களின் அபிவிருத்தி மீதான ரூபா 998,835 தொகையான காலக்கழிவு என்பன 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் மிகையாக காட்டப்பட்டிருந்தன. அதன் விளைவாக, ஆண்டுக்கான மிகை ரூபா 3,402,046 தொகையினால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டில் சரிசெய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | தேய்மானம் மற்றும் காலக் கழிவிடல் என்பன சரியாக கணிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டு வரப்படல் வேண்டும். |

## 1.6 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- | --- |
| (அ) | 1988 ஆம் ஆண்டின் 74 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 1975 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சொத்துக்கள் மற்றும் | ஒவ்வொரு ஆண்டும் 31 மார்ச் இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பிரகடனம் யூன் 30 இற்கு முன்னர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். ஆனால் நிறுவனத்தின் 11 பதவிநிலை | அந்த பதவிநிலை உத்தியோகத்தர்களின் 2022 மார்ச் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் பிரகடனம் 2022 யூன் 30 இற்கு முன்னர் | சட்டத்தின் ஏற்பாடுகள் பின்பற்றப்படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | பொறுப்புக்கள் பிரகடன சட்டம் | உத்தியோகத்தர்கள் அவர்களின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை 2014 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை பிரகடனப்படுத்தியிருக்கவில்லை. | சமர்ப்பிக்கப்படும். | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் 1645 (ஆ),(இ) மற்றும் 1646 | நிறுவனத்திற்கு சொந்தமான 02 வாகனங்களின் நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிறுவனத்திற்கு சொந்தமான அனைத்து வாகனங்களினதும் 2021 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படும். | நிதி ஒழுங்கு விதிகள் பின்பற்றப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 15,469,394 தொகையான மிகை ஆனதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 16,973,994 தொகையானதால் நிதி விளைவுகளில் ரூபா 1,504,600 தொகையான வீழ்ச்சியொன்றினைக் குறிக்கின்றது. அரச மானியங்கள் மற்றும் உருவாக்கப்பட்ட வருமானம் முறையே ரூபா 4,520,000 மற்றும் ரூபா 16,200,517 தொகையினால் அதிகரித்துள்ளமை அவதானிக்கப்பட்டிருந்த போதிலும், செயற்பாட்டு செலவுகள் ரூபா 23,802,765 இனால் அதிகரித்தமை குறிப்பிட்ட வீழ்ச்சிக்கான பிரதான காரணமாகும்.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் வாழைச்செடி ஒன்றினதும் கற்றாளை செடி ஒன்றினதும் உற்பத்தி செலவு முறையே ரூபா 164 மற்றும் ரூபா 72 தொகை ஆகும். இருப்பினும், செடி ஒன்று முறையே ரூபா 85 இற்கும் ரூபா 25 இற்கும் விற்பனை செய்யப்பட்டிருந்தமை காரணமாக செடியொன்றிற்கான உற்பத்தியில் முறையே ரூபா 79 மற்றும் ரூபா 47 தொகையான நட்டங்கள் அவதானிக்கப்பட்டது. அதன் | பயணக்கட்டுப்பாடுகளை தொடர்ந்து பணியாளர்களின் பற்றாக்குறை மற்றும் கொரோனா தொற்று காரணமாக விநியோகங்கள் மட்டுப்படுத்தப்பட்டமை காரணமாக உற்பத்தி செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டமை மற்றும் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் தொடர்ச்சியாக கொடுப்பனவு | உற்பத்தி கிரயத்தினை உள்ளடக்கியதாக விற்பனை விலை தீர்மானிக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக மீளாய்வாண்டில் தாவரங்களின் விற்பனை காரணமாக ரூபா 5,500,712 தொகையான மொத்த நட்டமொன்று நீடித்திருந்தது. | செய்யப்படுவதால் கிரயம் அதிகரித்தமை முதலிய காரணங்களினால் செடியொன்றின் கிரயம் அதன் விற்பனை விலையை விட அதிகரித்திருந்தது. | |
| (ஆ) | 2017 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை விவசாய தொழில்நுட்ப பட்டப்படிப்புக்காக இணைந்துள்ள 1391 மாணவர்களில் 904 மாணவர்கள் மட்டுமே தற்போது பாடநெறியினை தொடர்கின்றனர். அதன் பிரகாரம், 35 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 487 மாணவர்கள் பயிற்சிநெறியினை விட்டு விலகியிருந்தனர். இதனால் தற்போதைய சந்தை போக்குகளுடன் இணைந்து பாடநெறிகள் புதுப்பித்தல் செய்யப்பட்டிருக்கவில்லை என்று அவதானிக்கப்பட்டுள்ளது. | 2017 ஆம் ஆண்டில் பாடநெறி புதுப்பிக்கப்பட்டது மற்றும் பாடநெறியினை மீண்டும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன. | தற்போதைய சந்தை போக்குகளுக்கு ஏற்ப பாடநெறிகள் புதுப்பிக்கப்படல் வேண்டும். |